පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 488

ආයතනයේ නම : මහා භාරකාර දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 488

நிறுவனத்தின் பெயர் : பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Parliamentary Series No: 488

Name of the institution: Department Of Public Trustee

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 488

நிறுவனத்தின் பெயர்: பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்

| | செயற்குழுவினால் இனங்காணப்பட்ட குறைபாடுகள் / குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்ய குழுவினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தல் / தற்போதைய நிலைமை |
|---|---|---|
| 01 | <u>**கணினித் தரவு அமைப்பு ஒன்றை நிறுவுவதற்காக 2024ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ரூபா 35 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதன் தற்போதைய நிலைமை.**</u><br><br>முறையான ஒரு கணினித் தரவு அமைப்பு இல்லாத காரணத்தினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் வசமுள்ள சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கலான நிலை காணப்படுவதாக செயற்குழு சுட்டிக்காட்டியது.<br><br>குறித்த நிதி ஒதுக்கீடு அமைச்சின் கீழ் உள்ள 5 நிறுவனங்களுக்கு தரவு அமைப்புகளை நிறுவுவதற்காக வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு என்றும், தற்போது அதற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த நிறுவனங்களின் தேவைகளை இனங்கண்ட பின்னர் அடுத்த சில வாரங்களுக்குள் விலைமனுக்கள் கோரப்படும் என்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் (பி.க.உ) தெரிவித்தார்.<br><br>அவ்வாறே தற்போது திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் அடங்கிய ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டு அதிகாரிகளை இதற்காக ஈடுபடுத்தி நாடு முழுவதும் பரந்து காணப்படும் திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களைக் கணினிமயப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ / க.உ செயற்குழு முன்னிலையில் தெரிவித்தார். | புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள இன்னும் சில நிறுவனங்களின் மென்பொருள் அமைப்புகளை மேம்படுத்தும் நடவடிக்கைக்காக ரூபா 35 மில்லியன் நிதி ஒதுக்கீடு ஒன்றினை 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்துள்ளது.<br><br>இருப்பினும், கணினி மென்பொருளை உருவாக்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு பற்றாக்குறை காரணமாக எழுந்த சிக்கல்களின் காரணமாக, அமைச்சினால் அப்போதைய இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்திடமிருந்து (ICTA) தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளையும் மேம்பாட்டு உதவிகளையும் பெறுவதற்கான ஒரு கோரிக்கையைச் சமர்ப்பித்திருந்தது. என்ற போதிலும், தொழில்நுட்ப முகவர் நிலையமானது தற்போது பணிச்சுமையுடன் இருப்பதாலும், அதிகாரிகள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகளில் முழுத்திறனுடன் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாலும், குறித்த நேரத்தில் தேவையான உதவியினை வழங்குவது கடினம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய கணினி அமைப்புத் தேவைகளைத் தொழில்நுட்ப ரீதியாகக் கண்டறிவதிலும், மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதிலும் ஏற்பட்ட சிக்கல்களின் காரணமாக இந்தப் பணி தோல்வியடைந்துள்ளது.<br><br>திணைக்களத்தினால் தற்போது பயன்படுத்தப்படுகின்ற SAP கணினி மென்பொருள் அமைப்பின் தேவைப்பாடுகளை மேம்படுத்துவது தொடர்பில் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தகவல்தொழில்நுட்பப் |

| | | |
|---|---|---|
| | | பிரிவின் ஆலோசனைச் சேவை பெறப்பட்டு வருகின்றது. மேற்படி ஆலோசனைக்கு அமைவாக மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவிருப்பதுடன் தற்போது பயன்பாட்டிலுள்ள அமைப்பானது திணைக்களத்தின் அடிப்படை தொழிற்பாட்டிற்கு போதுமானதாக உள்ளது.<br><br>திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை ஆவணப்படுத்தும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதுடன், உரிய முறையில் கணினிமயப்படுத்தும் பணிகளும் அதனுடன் இணைந்ததாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. |
| 02 | <u>**பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் நாடு முழுவதும் பரந்து காணப்படும் சொத்துக்களை முகாமை செய்தல்.**</u><br><br>புதிய ஆட்சேர்ப்புகளைச் செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால், கௌரவ அமைச்சருடன் கலந்துரையாடி நிதி மற்றும் சட்ட ஆலோசனைகளைப் பெற்று, பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டத்தைத் திருத்தியமைப்பதன் மூலம் அல்லது மாவட்ட நீதிமன்றங்களிடமிருந்து உரிய அனுமதியைப் பெற்று, பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் உள்ள நம்பிக்கைப் பொறுப்பு பூதல்/ சொத்துக்களின் நிர்வாகத்தைப் பிரதேச ரீதியாக முன்னெடுப்பதற்காக 25 மாவட்டங்களினதும் மாவட்ட/பிரதேச செயலாளர்களைத் தொடர்புபடுத்திக் கொண்டு முறையான பொறிமுறையொன்றை விரைவாகத் தயாரிக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. | 2024.05.08 ஆம் திகதி அன்று நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின்படி, இது தொடர்பாக கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடப்பட்டது. அங்கு, பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் சொத்துக்களை ஒப்படைக்கும் நபர்கள் அந்தச் சொத்துக்களை பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பெயரிலேயே ஒப்படைப்பதாலும், இது தொடர்பாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டளைச் சட்டம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு ஆணைச் சட்டத்தின்படி செயற்பட வேண்டியிருப்பதாலும், அத்தகைய பூதல் / சொத்துக்களை மாவட்ட செயலாளர்கள் / பிரதேச செயலாளர்கள் வசம் ஒப்படைப்பது சட்ட ரீதியானது அல்ல எனத் தெரியவந்தது.<br><br>எவ்வாறாயினும், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்புச் சொத்துக்களின் நிர்வாகத்தின் போது சட்ட ரீதியான விடயங்களை உறுதிப்படுத்தவும், உரிமைகளை உறுதிப்படுத்தவும் அல்லது ஏனைய சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பாக விசேடமாகச் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 03 | <u>**திணைக்களத்திற்குச் சொத்துக்கள் கிடைத்தல்.**</u><br><br>இறுதி உயில்கள் மற்றும் நீதிமன்றக் | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் |

| | | |
|---|---|---|
| | கட்டளைகளின் மூலம் திணைக்களத்திற்குச் சொத்துக்கள் கிடைப்பதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். நீதிமன்றத்தின் ஊடாக மரணசாசன அதிகாரப் பத்திரம், ஆட்சி உரிமை ஆவணம் வழங்கப்படுவதன் ஊடாகவும், பாதுகாப்பாளராக நியமிப்பதன் மூலமும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திற்குச் சொத்துக்கள் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இதற்காக கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் போன்ற தரப்பினர்களை ஒருங்கிணைப்பதன் ஊடாகத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குத் திணைக்களம் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் செயற்குழு முன்னிலையில் மேலும் தெரிவித்தார். | ஒப்படைக்கப்பட்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பு பூதல் / சொத்துக்களின் நிர்வாகத்தின் போது சட்ட ரீதியான விடயங்களை உறுதிப்படுத்தவும், உரிமைகளை உறுதிப்படுத்தவும் அல்லது ஏனைய சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பாக விசேடமாகச் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 04 | <u>**பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் / உடமை வகைகள் மற்றும் அந்த வகைகளின் கீழ் இலங்கை முழுவதும் காணப்படும் சொத்துக்களின் துல்லியமான அளவுகள்.**</u><br><br>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் சொத்துக்கள் கிடைக்கும் பல்வேறு வழிகள் எவை என்றும், அந்த ஒவ்வொரு சொத்தும் எப்போது கிடைத்தது, யாரால் ஒப்படைக்கப்பட்டது, ஒப்படைப்புக்குரிய நிபந்தனைகள் எவை போன்ற விடயங்கள் அடங்கிய ஆவணமொன்றைத் தயாரிக்குமாறும், மேற்படி தகவல்கள் அடங்கலாக பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஒவ்வொரு சேவைகள் மற்றும் அந்த சேவைகளின் கீழ் கடந்த 5 ஆண்டுகளில் ஆற்றிய பணிகள் தொடர்பாக 2024 ஜூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு கூட்டத்தில் கணினி விளக்கக்காட்சி (Computer Presentation) ஒன்றை முன்வைக்குமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ/ க.உ இடம் செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. | இது தொடர்பான அறிக்கை ஒன்று PT/02/CA/01/740 ஆம் இலக்க மற்றும் 2025.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| 05 | <u>**பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள் / சொத்துக்களை குத்தகைக்கு விடுதல்.**</u><br><br>குத்தகைக்கு விடும் நடவடிக்கைக்கு | |

| | | |
|---|---|---|
| | மேலதிகமாக இராணுவம், சிவில் பாதுகாப்புப் படை அல்லது சிறைச்சாலைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி வீரர்களை மற்றும் கைதிகளை ஈடுபடுத்தி இக்காணிகளை மிகவும் உற்பத்தித்திறன் மிக்க பயிர்ச்செய்கை மற்றும் ஏனைய பணிகளுக்காகப் பயன்படுத்துவதற்கான மாற்று வழிமுறைகள் குறித்தும் செயற்குழுவினால் சுட்டிக்காட்டப்பட்டது. | பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள காணிகள் / தோட்டங்கள் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தினால் முகாமை செய்யப்படுகின்றன அல்லது விலைமனுக்களைக் கோரி குத்தகை அடிப்படையில் வழங்கப்படுகின்றன.<br><br>பரிந்துரைக்கப்பட்டவாறு இராணுவம், சிவில் பாதுகாப்புப் படை அல்லது சிறைச்சாலைகள் திணைக்களம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து இக்காணிகளில் / தோட்டங்களில் பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நடவடிக்கை செயல்திறன் மிக்கதாக அமையவில்லை. எனவே குத்தகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| 06 | <u>**நம்பிக்கைப் பொறுப்புகளின் நிதிகள்.**</u><br><br>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்திடம் 1130 நம்பிக்கைப் பொறுப்புகள் உள்ளன. அவற்றில் 1100 நம்பிக்கைப் பொறுப்புகள் செயலில் உள்ளதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ/க.உ தெரிவித்தார். இந்த நம்பிக்கைப் பொறுப்புகளின் நிதிகள் பிரதான வங்கிகள் 3 இல் 1936 கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் அவற்றின் மொத்த பெறுமதி ரூபா 2,823 மில்லியன் ஆகும் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ / க.உ தெரிவித்தார்.<br><br>இந்த நிதிகள் குறைந்த வட்டி வீதங்களின் கீழ் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகக் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், அரச வங்கிகளுடன் கலந்துரையாடி இலாபகரமான வட்டி வீதங்களின் கீழ் வைப்பிலிட்டதன் மூலம் 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 252 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது எனவும் அந்த நிதிகள் அந்தந்த நம்பிக்கைப் பொறுப்புகளின் நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்படுவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ / க.உ தெரிவித்ததுடன் மேலும், நிலையான வைப்புகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைகளாகவும் குறித்த நிதிகள் முதலீடு செய்யப்பட்டுள்ளன எனவும் | நம்பிக்கைப் பொறுப்புகளின் மேலதிக நிதிகளை முதலீடு செய்யும் போது, வங்கிகள் ஊடாகப் போட்டித்தன்மையுள்ள விலைமனுக்களைப் பெற்று அதிகபட்ச வட்டி வீதத்தை வழங்கும் வங்கியில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | அவர் குறிப்பிட்டார். | |
| 07 | **<u>நம்பிக்கைப் பொறுப்புகள் மூலம் கிடைக்கப்பெற்ற வாகனங்கள்.</u>**<br><br>ஒரு நம்பிக்கைப் பொறுப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற வாகனமொன்று திணைக்களம் வசமுள்ளதாகவும், குறித்த நம்பிக்கைப் பொறுப்பின் நோக்கத்திற்கு அமைய அவ்வாகனம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார். | குறித்த அந்த வாகனமானது தற்போது திணைக்களத்தின் அன்றாட பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதில்லை. எதிர்காலத்தில் குறித்த வாகனத்தை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். |
| 08 | **<u>காலி, பத்தேகம சுதுவெலிபொதவில் அமைந்துள்ள ஹெரீ ஹப்புகொட பூதலின் / நம்பிக்கைச் சொத்தின் தற்போதைய நிலைமை.</u>**<br><br>குத்தகைக்கு விடுவதற்காக மீண்டும் விலைமனுக்களைக் கோருமாறு செயற்குழுவினால் அறிவுறுத்தப்பட்டது. | இந்த நம்பிக்கைப் பொறுப்பின் கீழ் உள்ள 17 ஏக்கர் கொண்ட 'மத்தக்க வத்த' என அறியப்படும் காணி தற்போது விலைமனுக்கள் கோரப்பட்டு அதிகூடிய கேட்பு விலைக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. 61 ஏக்கர் 33 பேர்ச் அளவுடைய நிலத்தைக் கொண்ட 08 காணித் துண்டங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக தற்போது விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. ஏனைய காணிகள் தொடர்பாக ஆய்வு செய்து உரிய முறையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 09 | **<u>நம்பிக்கைப் பொறுப்புகளின் நலன் பெறுவோர்.</u>**<br><br>நம்பிக்கைப் பொறுப்புகளை ஒப்படைத்தவர்களின் இறுதி விருப்பத்தின்படி பணிகளை முன்னெடுத்த பின்னர் எஞ்சிய நிதி இருக்குமாயின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் அனுமதியின்படி புண்ணிய கருமங்களை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், பல நம்பிக்கைப் பொறுப்புகளுக்கு பல புண்ணிய / தரும ஸ்தாபனங்கள் தொடர்ச்சியான நலன் பெறுவோராக காணப்படுவதாகவும் செயற்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது. குறித்த நம்பிக்கைப் பொறுப்புகளின் மூலம் நிதி கிடைக்கப்பெறுவது குறித்து தொடர்புடைய புண்ணிய / தரும ஸ்தாபனங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்தச் சொத்துக்களை ஒப்படைத்தவர்களுக்குப் புண்ணியங்களை அநுமோதிக்கும் (சமர்ப்பிக்கும்) மதச் சடங்குகளும் | உரிய சமய ஆசாரங்களின்படி புண்ணிய கருமங்களை முன்னெடுக்கும் நடவடிக்கையானது அந்தந்த நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்தங்களின்படி உரிய முறையில் முன்னெடுக்கப்படுகின்றது. |

| | | |
|---|---|---|
| | திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுவதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ/க.உ தெரிவித்தார். | |
| 10 | <u>**வெளிநாட்டு நட்டஈடுகளை வாரிசுதாரர்களுக்கு வழங்குதல்.**</u><br><br>வெளிநாடு சென்ற இலங்கையர் ஒருவர் உயிரிழக்கும் போது அவருக்குரிய நட்டஈட்டு நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் தற்போது நிலவும் சட்ட நிலைமை, குறித்த அந்தச் செயல்முறையில் தற்போது பின்பற்றப்படும் நடைமுறைகள் மற்றும் கடந்த 5 ஆண்டுகளில் இவ்வாறு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் வழங்கப்பட்டுள்ள நட்டஈடுகளின் அளவுகள் மற்றும் வெளிநாட்டு நட்டஈடு வழங்கல் தொடர்பான சுற்றறிக்கைகள் என்பன உள்ளடங்கிய அறிக்கை ஒன்றினை 2024 ஜூலை மாதம் 06 ஆம் திகதிக்கு முன்னர் செயற்குழுவிடம் சமர்ப்பிக்குமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தும்படியும், அத்துடன் 2024 ஜூலை மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொது இராஜதந்திரப் பிரிவை (Consular Affairs Division) அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் செயற்குழுத் தலைவரினால் செயற்குழுவின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.<br><br>வெளிநாடு சென்றுள்ள இலங்கையர் ஒருவர் / தொழிலாளர் ஒருவர் வெளிநாட்டில் உயிரிழக்கும் போது வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் நட்டஈடு மற்றும் நிலுவைச் சம்பளம் என்பவற்றைப் பெற்றுக் கொடுக்கும் செயல்முறை தொடர்பாக தயாரிக்கப்பட்ட சுருக்கம் ஒன்றினை 2024.05.13 ஆம் திகதிக்கு முன்னதாக செயற்குழுவிற்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கும்படி புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ/க.உ இடம் செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. | இது தொடர்பான அறிக்கை ஒன்று PT/02/CA/01/740 ஆம் இலக்க மற்றும் 2025.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பொது இராஜதந்திரப் பிரிவுடன் 2025.06.11 மற்றும் 2026.02.19 ஆகிய திகதிகளில் வெளிநாட்டு நட்டஈடு வழங்கும் பணிகளை வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 11. | <u>**விகாரைகளுக்கான நட்டஈடு வழங்கல்.**</u><br><br>நாடு முழுவதிலும் உள்ள 417 விகாரைகளுக்கு ரூபா 1170 மில்லியன் நட்டஈடு வழங்க வேண்டியுள்ளதால், அந்த நட்டஈடு வழங்கலுக்காக நிர்ணயிக்கப்பட்ட விகாரைகளுக்கு ஒரு மாதிரிப் படிவத்தைத் தயார் | இது தொடர்பான அறிக்கை ஒன்று PT/02/CA/01/740 ஆம் இலக்க மற்றும் 2025.03.27 ஆம் திகதிய கடிதம் மூலம் உங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | செய்து அனுப்பித் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொண்டு, நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் / சிக்கல்களுக்குறிய விடயங்கள் இல்லாத விகாரைகளுக்கு அந்த நிதியை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும், அதன் முன்னேற்றத்தை 2024 ஜூலை மாதம் 20 ஆம் திகதி அன்று செயற்குழு முன்னிலையில் சமர்ப்பிக்குமாறும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ / க.உ இடம் பரிந்துரைக்கப்பட்டது. | விகாரை நட்டஈடு ஆணைச் சட்டத்தின் கீழ் உள்ள நட்டஈடு வழங்கல்கள் அந்தந்த விகாரைகளின் நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்திப் பணிகளுக்காக விடுவிக்கப்படும். இங்கு விகாரைகளின் தேவைக்கேற்ப அந்தப் பணிகள் இடம்பெறுவதால் நட்டஈட்டு உரிமம் தொடர்பான அறிவித்தல்களை வழங்குவதும், தேவையான சந்தர்ப்பங்களில் நட்டஈட்டு உரிமங்களை விடுவிக்கும் பணியும் மாத்திரமே இத்திணைக்களத்தின் பொறுப்பாக காணப்படுகிறது. |
| **12.** | **<u>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் இணையதளத்தை இற்றைப்படுத்தல்</u>**<br><br>திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள், தேவையான விண்ணப்பப் படிவங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டு அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகளையும் 2024 ஜூன் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் பதிவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ/க.உ இடம் செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. | திணைக்களத்தின் இணையதளத்தில் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் அவற்றை பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தகவல்கள் 2024 ஜூன் மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் பதிவேற்றப்பட்டுள்ளன. தமிழ் மொழிபெயர்ப்புகளும் பகுதிகளாக இற்றைப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது செயல்திறன் அறிக்கையும் மூன்று மொழிகளிலும் பதிவேற்றப்பட்டுள்ளது. |
| **13.** | **<u>பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் உள்ள சொத்துக்கள் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களில் நட்டஈடு வழங்கல்.</u>**<br><br>வோக்ஸ்வாகன் (Volkswagen) தொழிற்சாலைக்காகவும் வயம்ப பல்கலைக்கழகத்திற்காகவும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் வசம் இருந்த சொத்துக்கள் கையகப்படுத்தப்பட்டதாகவும், அதற்காகக் கிடைக்கப்பெற்ற பல மில்லியன் ரூபா நட்டஈட்டுத் தொகையானது நீதிமன்ற வழக்கு நடவடிக்கை காரணமாக இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும், அத்தொகையைப் பெற்றுக்கொண்ட பின்னர் உரிய காணிகளை நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் ஒப்படைத்தவர்களின் நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்தப்படும் என்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பி.க.உ/க.உ தெரிவித்தார். | குளியாப்பிட்டிய மாவட்ட நீதிமன்றில் நிலுவையில் உள்ள வழக்கு இலக்கம் 9/LA இன்னும் முடிவடையவில்லை. |